# அகவை 70 கண்டு மகிழ்ந்திடும் என் தாய்

நான் பிறக்குமுன்னரே எனக்காய்
இரத்தக் கண்ணீர் சிந்தியவர் எனது அம்மா
ஒரு நாளல்ல
ஒரு மாதமல்ல
பத்து மாதங்கள்
இராப்பகலாய் எனக்காக
உதிரம் சிந்தி
வியர்வை சிந்தி
கண்ணீர் சிந்தி

நா ருசிக்கும் உணவைத் தவிர்த்து
கண் விரும்பும் காட்சிகள் தவிர்த்து
மனம் விரும்பும் அனைத்தையும் தவிர்த்து
போக விரும்பும் இடங்களையும் தவிர்த்து

எல்லாம் மொத்தமாய் எனக்காய்த்தான்
எல்லாம் மொத்தமாய்
என் பிறப்பு - நாளை
நலமாய் அமைய வேண்டும் என்ற
நல்ல கனவுக்காய்த்தான்

அந்தப் பத்து மாதங்களோடு - அந்தத்
தாய்மை முடிந்து போகவில்லை

ஒவ்வொரு நாளையும்
பாரிய போராட்டமாய்
செலவழித்தவர் என் தாய்

குழந்தையாய் நான் வாழ
தன்னைக் குழந்தையாக்கி
தந்தையின் குழப்பங்களைத்
தானே உள்வாங்கி
எனக்காக எரிந்தவர் என் அம்மா

என் இளமை உலாவின்
உல்லாசங்கள்
அன்னையின் உள்ளத்தைக்
கிலேசம் கொள வைத்தாலும்
கோபமின்றிப் பாசம்
பொழிந்தவர் என் அம்மா

கல்லூரிப் பருவத்தின் கனவுகளை
கச்சிதமாய்ப் புரிந்து கொண்டு
வீட்டில் தந்தைக்கும்
வீதியில் உறவினர்க்கும்
உளமாரப் பொய்சொல்லி
என் பெயர் காத்தவர் என் தாய்
எல்லாம் எனக்காய்த்தான்

என் கனவின் நிறங்கள்
ஆயிரம் கதை சொல்லுமென்று
நான் கனாக் கண்டபோது
நான் காணாமல்
எனக்காய் அழுது தொலைத்தவள்
என் தாய்
எல்லாம் எனக்காய்த்தான்

தண்ணீரில் விளைந்த உப்பு
தண்ணீரில்த்தான் கரைய வேண்டும் - என்பது
அப்போதும் இப்போதும் எனக்குப் புரியவில்லை
எல்லாம்
என் தந்தைக்கும் விளங்கவில்லை
என் உறவுகளும் உணரவில்லை
எல்லாம் என் அன்னைக்கு
துல்லியமாகப் புரிந்து போனது
ஏனென்றால் இந்த அம்மா மட்டும்தான்

நான் பிறக்குமுன்னரே எனக்காய்
இரத்தக் கண்ணீர் சிந்தியவர்

பாழான உடலுக்குள் சீறியெழுகிறது
ஆன்மாவின் கூக்குரல்

சிட்டாய்ப் பறந்த சிறுவயதில்
இந்தத் தாய் பட்ட துன்பம் உணரவில்லை

பட்டாய்ப் பள்ளியில் சுத்தியபோதும்
சற்றேனும் புரியவில்லை இவர் வேதனை

விட்டு வெளியேறி, வெளிநாடு பறந்ததும் தான்
இந்தத் தாய் தந்த கண்டிப்புக் கலந்த அன்பை
அனுபவிக்கத் துடித்தேன்
அது கனடிய வருகை வரை கிட்டவே இல்லை

வீட்டிலே சில்லறை களவாடி சாக்லேட் வாங்கிய போதும்
ஓட்டிலே சித்திரப் புத்தகம் சத்தமின்றி வாசித்த போதும்
றோட்டிலே சண்டை போட்டு சட்டைகளைக் கிழித்த போதும்
வீட்டிலே என் அம்மா வட்டிக்குக் கடன் வாங்கி - தன்
மழலைகளுக்குச் சோறு போட்டது எனக்குப் புரியவில்லை

மாலையிலே அத்தனை பேரும் வட்டமாய் உட்கார்ந்து
கவளச் சோறை கை நீட்டி வாங்கிய போது
தண்ணீரை மட்டும் அருந்தித் தூங்கிய இந்த அம்மாவின்
பட்டினி வயிற்றின் சத்தம் சுத்தமாய் எனக்குக் கேட்கவில்லை

மதிய வேளை வீடு வந்து துண்டு மீனுக்கு அழுதபோது
வெறும் சோறும் இல்லாமல் பிளேய்ன்ரீ குடித்துத் தூங்கிய
என் அம்மாவின் பசி வயிறுப் போராட்டம் புரிய மறுத்தது
பழமும் பாணுமாவது தந்து, தன்னைப் பட்டினி போட்டாலும்
தன் குழந்தைகளைப் பட்டினியின்றிக் காக்க - கை நீட்டிக்
கடன் வாங்கிய என் உயரிய தெய்வம் என் அம்மா

இன்னும் எத்தனையோ இருக்கிறது
குருமடத்தில் கௌரவமாய் உடையுடுத்த செலவழித்தேன்
குருமட உணவுக்கு மேல் கடையுணவு உண்டிட செலவழித்தேன்
கள்ளமாய் வெளியேறி, தியேட்டரில் படம் பார்க்க செலவழித்தேன்
புத்தகம் பழையதல்ல புதியது வேண்டுமென்று செலவழித்தேன்
சுத்த வெள்ளையில் உடையுடுத்த லோன்றிக்கும் செலவழித்தேன்
ஒவ்வொரு பிறந்தநாளுக்கும் அத்தனை பேருக்கும் சுவீற் கொடுத்தேன்
கிழமை தோறும் நான் எழுதிய கடிதத்தில்
அது வேணும் இது வேணும் என்று கேட்டெழுதி,
அத்தனையும் உடன் பெற்று பகட்டாக வளர்ந்தேன்

ஆனால் வீட்டிலே என் அம்மாவின் மற்றய பிள்ளைகள்
அத்தனையுமின்றி அவதிப்பட்டது அப்போது உறைக்கவில்லை
உறைக்கும் நிலையிலும் என் அன்னை என்னை விட்டதில்லை

அரேபியாவும் நெதர்லாந்தும் ஜேர்மனியும் கனடாவும்
அம்மாவின் அந்தத் துன்பியல் வளர்ப்பை
எனக்குச் சொல்லித் தரவில்லை

இப்போது புரிகிறது என் அன்னையின் தியாகம்
அப்போது நேரிலே சுவைக்காத அப் பாசம்
எப்போதும் இனி நான் தப்பாது காப்பேன்

சுத்தமாய் அகவை எழுவதைத் தீர்த்திடும் - என்
முத்தான அன்னைக்கு
தித்திக்கும் முச்சுவை கலந்தநல்
பிறந்தநாள் வாழ்த்துக்கள் கூறினம் !!

கண் கண்ட தெய்வம்
என் அம்மாவை
கண் போன்று காத்திட
இறைவா எனக்கு நீ
இறவா வரம் ஒன்று தா !!!

*அன்பு மகன் : குயின்ரஸ் துரைசிங்கம்*
*டீலியா, சங்கீத், கவீந்*
*22 ஜனவரி 2004*